தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.11.2013**

**உழவுத் தொழிலில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த அறிவுறுத்தல்**

உழவுத் தொழில் நவீன தொழில்நுட்பங்களைக் கையாளுமாறு, பெங்களூருவில் நடைபெற்ற பன்னாட்டு வேளாண் கண்காட்சியில் முன்னோடி விவசாயிகள் அறிவுறுத்தினர்.

பெங்களூரு விவசாயப் பல்கலைக்கழகம் சார்பில், பெங்களூரு காந்தி வேளாண் அறிவியல் மையத்தில் ஐந்து நாள்கள் நடைபெற்ற பன்னாட்டு வேளாண் கண்காட்சியின் நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் முன்னோடி விவசாயி பசவராஜ் கெப்ஜகி பேசியது:

விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை புகுத்தினால், லாபகரமானத் தொழிலாக மாற்றியமைக்க முடியும். விவசாயப் பணிகளுக்கு பலவகையான கருவிகள் வந்துள்ளன. அவற்றை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

வேளாண் கண்காட்சிகளில் இதுபோன்ற கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். அதை விவசாயிகள் அறிந்து பயன்படுத்த வேண்டும். படித்த இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டும்.

நமது நாட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்வது விவசாயம். எனவே, இளைஞர்கள் விவசாயத்தில் அதிகம் ஈடுபட வேண்டும் என்றார் அவர்.

மண்டியாவைச் சேர்ந்த விவசாயி சென்னே கெப்டா பேசியது:

விவசாயத் தொழில், அரசுப் பணி போல மாறி வருகிறது. அக்கறையுடன் செயல்பட்டால், விவசாயத்தை போல மகிழ்ச்சி தரக் கூடிய தொழில் வேறு இருக்க முடியாது. விவசாயத்தில் தொழில்நுட்பம், நவீனக் கருவிகளின் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டும்.

விவசாயத் துறையில் நிகழும் புதிய கண்டுபிடிப்புகள் விவசாயிகளைச் சென்றடைந்தால் மட்டுமே அதன் பலன் நாட்டுக்குக் கிடைக்கும்.

விவசாயக் கருவிகளைக் கொள்முதல் செய்ய அரசு மானியம் தருகிறது என்றார் அவர்.

ஐந்து நாள்கள் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் மொத்தம் 10 லட்சம் பேர் கலந்து கொண்டனர்.

**கரும்பு கொள்முதல் விலை:டன்னுக்கு ரூ. 2,500-ஆக நிர்ணயம்**

கர்நாடகத்தில் கரும்புக்கான கொள்முதல் விலை டன்னுக்கு ரூ. 2,500-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கரும்புக்கான கொள்முதல் விலை டன்னுக்கு ரூ. 3,500-ஆக நிர்ணயிக்க வலியுறுத்தி, கர்நாடக மாநிலம், பிஜாப்பூர், பாகல்கோட்டை, பெல்காம், மண்டியா ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், கரும்புக்கான கொள்முதல் விலையை நிர்ணயம் செய்வது குறித்து பெங்களூருவில் ஞாயிற்றுக்கிழமை மாநில அமைச்சர்கள் மகாதேவ பிரசாத், கிருஷ்ண பைரேகெப்டா, எஸ்.ஆர்.பாட்டீல், பிரகாஷ் ஹுக்கேரி ஆகியோருடன் முதல்வர் சித்தராமையா ஆலோசனை நடத்தினார்.

இதைத் தொடர்ந்து, பெங்களூரு விகாஸ் செப்தாவில் நடைபெற்ற கரும்பு கொள்முதல் நிர்ணய வாரியக் கூட்டத்தில், கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் குருபூர் சாந்தகுமார், கர்நாடக விவசாயிகள் சங்கத் தலைவர் புட்டனையா, சர்க்கரை ஆலைப் பிரதிநிதிகள் ஆகியோருடன் மாநில அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினர்.

விலை நிர்ணயம்:கூட்டத்திற்குப் பிறகு, செய்தியாளர்களிடம் அமைச்சர் மகாதேவ பிரசாத் கூறியது:

விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலைகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு, கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ. 2,500-ஆக நிர்ணயித்துள்ளோம் என்றார் அவர்.

அமைச்சர் பிரகாஷ் ஹுக்கேரி கூறியது:

விவசாயிகளிடமிருந்து டன் கரும்பு ரூ. 2,400-க்கு சர்க்கரை ஆலைகள் கொள்முதல் செய்யும். மேலும், அரசு சார்பில் விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ. 100 தரப்படும். இதற்காக ரூ. 300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

போராட்டம் தொடரும்: விவசாயிகள் சங்கத் தலைவர் குருபூர் சாந்தகுமார் கூறியது:

கரும்பின் பிழிவுதிறன் அடிப்படையில் கொள்முதல் விலை நிர்ணயிக்குமாறும், கரும்பு உற்பத்திச் செலவு 25 சதம் கூடியுள்ளதால், டன் கரும்புக்கு கொள்முதல் விலையாக ரூ. 3,500 வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினோம்.

ஆனால், எங்களது கோரிக்கையை அரசு கண்டு கொள்ளவில்லை. இதனால், அரசின் இந்த முடிவை நாங்கள் ஏற்கவில்லை.

எனவே, வருகிற 15-ஆம் தேதி விவசாய சங்கப் பிரதிநிதிகள் கூடி அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்போம் என்றார் அவர்.

**தீவனங்களின் விலை உயர்வால் பராமரிப்பதில் சிக்கல் "அடிமாட்டு விலைக்கு' விற்கப்படும் கறவை மாடுகள்**

அவசரத் தேவைக்கு அத்தியாவசியமான ஒரு பொருளை விற்க முற்பட்டால் அதனை அடிமாட்டு விலைக்கு கேட்பார்கள் என்பது சொல்வழக்கு. அந்தச் சொல்வழக்கு தற்போது குமரி மாவட்ட விவசாயிகளுக்குப் பொருத்தமாக உள்ளது.

விவசாயத்துக்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பை மேற்கொண்டுவரும் விவசாயிகள், தீவனங்களின் விலை ஏற்றம் காரணமாக பசுக்களைப் பராமரிக்க முடியாமல், குறைந்த விலைக்கு விற்கும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் தென்கோடி மாவட்டமான கன்னியாகுமரியில் மலைசார்ந்த இடங்களும், விவசாய விளைநிலங்களும் அதிகமாக இருந்ததால் வீடுகள்தோறும் பசுமாடுகளை வளர்க்கும் சூழல் இருந்துவந்தது.

பசுக்களை வளர்த்ததால் பால் உற்பத்தி மூலம் விவசாயிகளின் அவசரத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமான பணம் கிடைத்து வந்தது.

ஆனால், இம்மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் பெரும்பாலான விவசாய நிலங்கள் குடியிருப்பு நிலங்களாக மாறிவிட்டன. இதனால் பசுமாடு வளர்ப்புக்கு மூலாதாரமான மேய்ச்சல் நிலங்கள் குறைந்துவிட்டன.

இதன் காரணமாக மாடுகளின் முக்கியத் தீவனமான புல் கிடைப்பது அரிதாகிவிட்டது. கடைகளில் விற்கப்படும் பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, தவிடு போன்ற பொருள்களை மட்டுமே மாடுகளுக்கு உணவாகக் கொடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் விவசாயிகள்.

இந்நிலையில் தீவனங்களின் விலையும் கடுமையாக உயர்ந்துவிட்டது. கடந்த ஓராண்டுக்கு முன்பு ரூ. 35-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ பருத்திக்கொட்டை தற்போது ரூ.50-க்கும், ரூ.30-க்கு விற்கப்பட்டுவந்த ஒரு கிலோ புண்ணாக்கு ரூ.45-க்கும்,

ரூ.12-க்கு விற்கப்பட்டு வந்த கோதுமைத் தவிடு ரூ.20-க்கும் விற்கப்படுகிறது. தீவனங்களின் விலையேற்றத்துக்கு ஏற்ப போதிய வருவாய் கிடைக்காததால் மாடுகளை குறைந்த விலைக்கு விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து 35 ஆண்டுகளுக்கும் மேலாக பசுமாடு வளர்த்துவரும் விவசாயியான ஆமணக்கன்விளையைச் சேர்ந்த கே.ஆறுமுகம் கூறியதாவது:

வீடுகளில் வளர்க்கப்படும் பசுமாடுகள் நாளொன்றுக்கு 10 முதல் 14 லிட்டர் வரை பால் தருகிறது. ஒரு லிட்டர் பால் ரூ.18 என வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இதன்மூலம் ரூ.180 முதல் ரூ. 250 வரை கிடைக்கிறது.

கறவை மாடுகளுக்கு சரியான அளவு தீவனம் கொடுத்துப் பராமரிக்க நாளொன்றுக்கு ரூ.120 வரை செலவாகிறது. இதில் லாபம் என பார்த்தால் நாளொன்றுக்கு ரூ.60 முதல் 130 வரை மட்டுமே கிடைக்கிறது. வீட்டில் ஒருமாடு வளர்த்தால் ஒரு குடும்பத்தின் முழுநேர உழைப்பும் அதற்காகத் தேவைப்படுகிறது.

மாடு வளர்க்கும் அனைத்துக் குடும்பத்தினராலும் இதை சமாளிக்க முடியாததால் மாடுகளை விற்கும் நிலை ஏற்படுகிறது. இதைத் தடுக்க பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க அரசு முன்வர வேண்டும்.

லிட்டர் ஒன்றுக்கு ரூ.30 என உயர்த்தி வழங்கினால் மட்டுமே கறவை மாடுகள் வளர்ப்பை நாங்கள் தொடர இயலும். இதற்கு அரசின் முழு ஒத்துழைப்பு அவசியம் என்றார் அவர்.

**கால்நடைகளுக்குத் தடுப்பூசி**

அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தொற்று நோயைத் தடுக்க தடுப்பூசி போடப்படுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கால்நடைகளைத் தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று கால்நோய் என்ற கோமாரி(கசப்பு) நோயாகும். இந்நோய் 63 வகையான வைரஸ் கிருமிகளால் பரவுகிறது. மழைக் காலத்திலும், பனிக்காலத்திலும் இக்கிருமியானது தண்ணீர், காற்றின் மூலம் பரவக்கூடியது.

இந்நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் வாயிலும், நாக்கிலும், கால் குழம்புகளிடையிலும் புண்கள் ஏற்படும். அவை தீனீ உட்கொள்ள முடியாமல் மிகவும் மெலிந்து விடும். வெயில் காலத்தில் நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மூச்சிரைக்கும். தோலின் தன்மை கடினமாகவும், தோல்மயிர்கள் அதிகம் வளர்ந்தும் காணப்படும்.

பால் கறவை குறையும். கறவைப் பசுக்களில் பால் குடித்து வரும் கன்றுகள் உடனடியாக இறந்து விடும்.

இந்த நோய் தாக்காத வண்ணம் கால்நடைகளை காக்க தடுப்பூசி ஒன்றே சிறந்த நிவாரணம். அரியலூர் மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறையினரால் செப். 21 முதல் கால்நோய்,வாய்நோய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது. எனவே கால்நடைகளை வளர்ப்போர் அருகில் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களை அணுகிப் பயன்பெறலாம்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 80.76 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 80.76 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 6,609 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 7,287 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து நொடிக்கு வெண்ணாற்றில் 502 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 501 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட அறிவுறுத்தல்**

கோமாரி நோய் தாக்குதலைத் தடுக்க அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும் என, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில், 5.9.2013 முதல் 10.10.2013 வரை கோமாரி நோயைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ், அனைத்துக் கிராமங்களிலும் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு கோமாரி நோய் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டது.

இதில், 3.38 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. கிராமங்களில் தடுப்பூசிப் பணிக்கு பிறகு புதிதாக வாங்கப்பட்ட கால்நடைகள் சினையின் காரணமாக கால்நடை வளர்ப்போரால் தடுப்பூசி போட மறுக்கப்பட்ட கால்நடைகள் மூன்று மாதங்களுக்கு குறைவான இளங் கன்றுகள் போன்ற பல்வேறு காரணங்களால் விடுப்பட்ட கால்நடைகளில் கோமாரி நோய் தாக்கம் இருப்பதாக கண்டறியப்பட்டு, விடுப்பட்ட கால்நடைகளுக்கு சிறப்புக் குழுவினர் மூலம் தடுப்பூசி போடும் பணி மீண்டும் தற்போது மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் தட்டான்குட்டை, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம் கொந்தளம் கிராமங்களில் கோமாரி நோய் தாக்கம் பற்றிய தகவல் அறிந்து கால்நடை மருத்துவக் குழுவினர் மூலம் உரிய சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு கால்நடைகள் இறப்பைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தற்போது அந்தப் பகுதி முழுவதும் தீவிரக் கண்காணிப்பில் உள்ளது.

சந்தையிலேயே தடுப்பூசி: நாமக்கல் மாவட்டத்திலுள்ள கால்நடை சந்தைகளான மோர்பாளையம், புதன்சந்தை ஆகியவற்றில் சந்தை நடைபெறும் நாள்களில் விற்பனைக்கு வரும் கால்நடைகளுக்கு சந்தையிலேயே கோமாரி நோய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாவட்டத்தில் தற்போது கண்டறியப்படும் நோய் தாக்குதல். பெரும்பான்மையாக வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்டு சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வரும் கால்நடைகளில் இருந்து பரவ வாய்ப்புள்ளதால், கால்நடை பராமரிப்புத் துறையிடம் தங்களது கால்நடைகள் குறித்து கேட்டறிந்து கொள்ளவும்.

கோமாரி நோய் காற்று, நீர் மூலம் வேகமாக பரவக் கூடிய நோய் என்பதால், நோயால் பாதிக்கப்பட்டக் கால்நடைகளில் பால் உற்பத்தி, இறைச்சி உற்பத்தி மற்றும் எருதுகளில் ஆற்றல் குறைவாவதுடன் இறப்பும் ஏற்பட வாய்ப்புள்ளது.

கால்நடை வளர்ப்போர் அனைவரும் வடகிழக்கு பருவமழை மற்றும் பனிப்பொழிவைக் கருத்தில் கொண்டு கோமாரி நோயின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளைக் காப்பாற்ற தடுப்பூசி போடாமல் விடுபட்ட

கால்நடைகளை அருகிலுள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி தடுப்பூசி போட வேண்டும் என்றார்

ஆட்சியர்.

**மேட்டூர் அணை கிழக்குக் கரை பாசனக் குழாயில் துவாரம்**

மேட்டூர் அணையின் கிழக்குக் கரை கால்வாய் குழாயில்  ஏற்பட்டுள்ள சிறு துவாரம் வழியாக  தண்ணீர் கசிந்து சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாய்கள் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

மேட்டூர் அணையிலிருந் 4.4 மைல் தொலைவுக்கு இரண்டு கால்வாய்களும் இணைந்துச் செல்லும். காவிரி கிராஸில் கிழக்குக் கரை கால்வாய்க்கு இரு பெரியக் குழாய்கள் மூலம் தண்ணீர் தனியே பிரித்து கொண்டுச் செல்லப்படுகிறது. இதற்காக சுமார் 300 மீட்டர் தொலைவுக்கு ராட்சத குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.  இந்தக் குழாயில்  சிறிய அளவில் துவாரம் ஏற்பட்டுள்ளது. தற்போது, பாசனத்துக்கு தண்ணீர் செல்வதால் குழாயில் ஏற்பட்ட துவாரத்தை பற்றவைத்து அடைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், மரக்கட்டை தக்கைகளைப் பயன்படுத்தி துவாரத்தை அடைத்தனர். ஆனால், ஞாயிற்றுக்கிழமை யாரோ அந்த அடைப்பை எடுத்து விட்டுள்ளனர். இதனால்,  துவாரம் மூலம் தண்ணீர் பீரிட்டு சென்றது. இது குறித்து தகவலறிந்ததும்  பொதுப்பணித் துறையினர். உடனடியாக சென்று துவாரத்தை அடைத்தனர்.

**விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி**

மேற்கு ஆரணி வட்டாரத்தில் உள்ள ஆகாரம், ஆண்டிப்பாளையம் கிராமங்களில் விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

ஆகாரம் கிராமத்தில் நடைபெற்ற இப்பயிற்சியானது ஆகாரம் ஊராட்சிமன்றத் தலைவர் எம்.டி.ரேவதி தலைமையிலும், ஆண்டிப்பாளையத்தில் ஊராட்சிமன்றத் தலைவர் பி.நந்தகுமார் தலைமையிலும் நடைபெற்றது.

வேளாண்மைத்துறையும், விதைச்சான்று துறையும் இணைந்து விவசாயிகளுக்கு இப்பயிற்சியை அளித்தது. விதைச்சான்று உதவி இயக்குநர் பேபிவர்தம், விதை என்பது எவ்வாறு இருக்க வேண்டும். சான்று விதை, ஆதார விதை எவ்வாறு இருக்கும். சான்றட்டைகளின் நிறம் மற்றும் விதைகளின் தரம் குறித்து எடுத்துரைத்தார்.

வேளாண் துறை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி திருந்திய நெல் சாகுபடி குறித்து எடுத்துரைத்தார். திருந்திய நெல் சாகுபடி செய்பவர்களுக்கு இடுபொருள்களும், காசோலையும் வழங்கப்படும் என தெரிவித்தார். மேலும் விவசாயிகளுக்கு நெல் விதைகள் மானிய விலையில் வழங்க தயார் நிலையில் உள்ளது என்றும் கூறினார்.

விதைச்சான்று துறையைச் வேளாண் அலுவலர் சாந்தி, வேளாண்மை அலுவலர்கள் ஜெய்சங்கர், முருகன், நந்தகுமார் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**விவசாயிகளுக்கு ரூ.21 கோடி இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

சின்னவேடம்பட்டி குளத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்பீட்டு தொகையான ரூ.21.60 கோடியை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகள் சங்கத்தின் (கட்சி சார்பற்றது) செயற்குழுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில், பொதுச் செயலாளர் பி.கந்தசாமி, செயலாளர் செந்தில்குமார், துணைத் தலைவர் சின்னத்தம்மண்ணன் உள்பட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: சின்னவேடம்பட்டி குளத்துக்காக விவசாயிகளிடமிருந்து தமிழக அரசு கையகப்படுத்திய 65.5 ஹெக்டேர் நிலங்களுக்கு தமிழக அரசு உச்ச நீதிமன்ற உத்திரவுப்படி வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூ.21.6 கோடியை தாமதமின்றி வழங்க வேண்டும்.

வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை மூலமாக விவசாயிகளுக்குத் தேவையான சான்றளிக்கப்பட்ட விதைகளை உற்பத்தி செய்து, விவசாயக் கிடங்குகள் மூலமாக விற்கப்பட வேண்டும். மாறாக, தனியாரிடம் விலைக்கு வாங்கி தரமற்ற விதைகளை விவசாயிகளுக்கு விற்கக் கூடாது.

அரசு மானியத்தில் பொருத்தப்படுகின்ற சொட்டு நீர்ப் பாசன குழாய்களில் சிஎம்எல் என்ற தர முத்திரை ஒவ்வொரு மீட்டர் நீள இடைவெளியிலும் பதித்து இருக்க வேண்டும். எனவே, தர முத்திரை இல்லாத குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தால் தாமதமின்றி வேளாண் அதிகாரிகளிடம் புகார் செய்து விட்டு, விவசாயிகள் சங்கத்தை அணுகினால் தகுந்த இழப்பீடு பெற ஆவன செய்யப்படும்.வருவாய் ஆவணங்களில் வேண்டுமென்றே தவறிழைக்கும் வருவாயத் துறை அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தவறுகளை போர்க் கால அடிப்படையில் சரி செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

**கோழிக்கறி கிலோ ரூ.100 மொட்டுக் காளான் ரூ.220**

பிராய்லர் கோழிக்கறி கிலோ 100 ரூபாய்க்கு விற்கப்படும் நிலையில், அதை விட அதிகமாக மொட்டுக்காளான் கிலோ ரூ.220 ஆக உள்ளது.

கறிக்கோழிகளின் வியாபார ஏற்ற, இறக்கத்தைப் பொறுத்து அவற்றின் பண்ணைக் கொள்முதல் மற்றும் விற்பனை விலையில் அவ்வப்போது மாற்றம் செய்யப்படுகிறது. தற்போது சில்லறை விற்பனைக் கடைகளில் பிராய்லர் கோழிக்கறி கிலோ ரூ.100 க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அனால் இதை விட 100 சதவீதம் அதிகமாக மொட்டுக்காளான் விலை கிலோ ரூ.220 ஆக உள்ளது. இது தீபாவளி சமயத்தில் ரூ.400 ஆக இருந்தது. வெள்ளக்கோவில் ஞாயிற்றுக்கிழமை வாரச் சந்தையில் காய்கறி விலை நிலவரம் வருமாறு:

சின்ன வெங்காயம் கிலோ ரூ.80, பெரிய வெங்காயம் ரூ.45, கத்தரி, தக்காளி-ரூ.35, பாகற்காய், வெண்டை, பீர்க்கன், புடலை-ரூ.40, முட்டை கோஸ் ரூ.25, பீட்ரூட் ரூ.42, கேரட் ரூ.65, தேங்காய் ரூ.5, முட்டை ரூ.4.

**மக்காச்சோளம் சாகுபடிக்கு மாறிய தாளவாடி விவசாயிகள்**

தாளவாடி பகுதியில் பெய்த தொடர் மழையால் பெரும்பாலான விவசாயிகள், மக்காச்சோளம் சாகுபடிக்கு மாறிவிட்டனர். இதனால், ராகி, காலி பிளவர், பூண்டு போன்ற பயிர்களின் சாகுபடி நிலங்கள் குறைந்துவிட்டன.

தாளவாடி மலை வட்டாரத்தில் உள்ள பெரும்பான்மையான விளை நிலங்களில் மானாவாரிப் பயிர்களான மரவள்ளிக் கிழங்கு, ராகி, மக்காச்சோளமும் கிணற்றுப் பாசனம் மூலமாக உருளைக் கிழங்கு, கேரட், பீன்ஸ், பூண்டு, காலி பிளவர் மற்றும் முட்டைக்கோஸ் சாகுபடி செய்து வந்தனர். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் மானாவாரி நிலங்கள் தரிசாக கிடந்தன. சமீபத்தில் பெய்த பருவ மழையால் தாளவாடி விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டதன் விளைவாக மக்காச்சோளம் பயிர் செய்ய ஆர்வம் காட்டினர். இதையடுத்து, கடந்த மாதம் நிலத்தில் ஈரப்பதம் உள்ளபோதே ஆயிரக்கணக்கான ஏக்கரில் மக்காச்சோளம் விதைத்தனர். 3 மாதப் பயிரான மக்காச்சோளம் தற்போது ஓரளவு வளர்ந்துள்ளது.

தலமலை, மல்லன்குழி, கோடிபுரம், நெய்தாளபுரம், தொட்டபுரம், திகினாரை, நெய்தாளபுரம், சிக்கள்ளி உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மக்காச்சோளம் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோதுமைக்கு அடுத்தபடியாக அதிக புரதச்சத்து அடங்கிய தானியப் பயிரான மக்காச்சோளம் ஏக்கருக்கு 9 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கிறது. நடப்பாண்டு மக்காச்சோளம் உற்பத்தி தாளவாடி பகுதியில் 15 ஆயிரம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்காச்சோளத்தில் இருந்து மாவு, மருந்துப் பொருள்கள் தயாரிக்கவும், கால்நடைகளுக்குத் தீவனமாகவும், கோழிகளுக்கு முக்கியத் தீவனமாகவும் உள்ளது.

இதுகுறித்து, மல்லன்குழி விவசாயி பசுவன்னா கூறியது:

மக்காச்சோளம் வறட்சியைத் தாங்குவதுடன், குறைவான நீர்ப் பாசனத்தில் வளரக்கூடியது. கிணற்றுப் பாசனம் மூலமாக ஜூலையில் விதைப்பு செய்யப்பட்ட நிலங்களில் மக்காச்சோளக் கதிர் வெளிவரும் மற்றும் பால் பிடிக்கும் தருணத்தில் உள்ளது. பருவ மழையை நம்பி கடந்த மாதம் விதைக்கப்பட்ட பயிர் ஓரளவு வளர்ந்து செழிப்பாக உள்ளதால் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது.

கடந்த ஆண்டு கிலோ ரூ.14-க்கு விற்கப்பட்ட மக்காச்சோளம், வரும் மாதத்தில் ரூ.18 வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரசாயன மருந்து தெளிப்பதைத் தவிர்த்து, இயற்கை வழியில் சாகுபடி செய்வதால், அது நன்கு வளர்ந்து செழிப்புடன் காணப்படுவதால் உயர்தர மக்காச்சோளமாக அறுவடை

செய்யப்படும். நடப்பாண்டு விவசாயிகளுக்கு கை கொடுக்கும் பணப் பயிர் மக்காச்சோளம் என்பதில் சந்தேகமில்லை என்றார்.

**அரசு நெல் கொள்முதல் நிலையம் கோபி ரைஸ் மில்லில் திறப்பு**

கோபியில் அரசின் நெல் கொள்முதல் நிலையம் சனிக்கிழமை திறக்கப்பட்டது.

கோபி மற்றும் சுற்றுப் பகுதியில் 16 இடங்களில் அரசு சார்பில் நெல் கொள்முதல் மையங்களைத் துவங்க வேண்டும் என்று விவசாயிகள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் முதல்கட்டமாக, கோபி, பொலவக்காளிபாளையம், கூகலூர், டி.என்.பாளையம், புதுக்கரைப்புதூர், புதுவள்ளியாம்பாளையம், ஏளூர், காசிபாளையம், கள்ளிப்பட்டி, அத்தாணி ஆகிய 10 இடங்களில் தமிழக அரசு சார்பில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் துவக்கப்பட்டன.

கோபியில், பாரியூர் சாலையில் அமைந்துள்ள தனியார் ரைஸ் மில் தற்போது அரசின் நேரடி நெல் கொள்முதல் மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தை  வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாச்சலம் துவங்கி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தலைமை வகித்தார். கோபி சார் ஆட்சியர் சந்திரசேகர் சாகமுரி முன்னிலை வகித்தார். ஈரோடு மாவட்ட ஊராட்சித் தலைவர் செல்வம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் முருகானந்தம், துணை மேலாளர் (தரக் கட்டுப்பாடு) குமாரசாமி, கண்காணிப்பாளர் (நிர்வாகம்) சிவராஜ், கோபி வட்டாட்சியர் துரை உள்பட பலர் கலந்து கொண்டனர். அரசின் நேரடி நெல் கொள்முதல் மையத்தில் சன்ன ரகம் (ஏ-கிரேடு) குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்ச விலை ரூ.1,415 என்றும், குண்டு ரகம் குவிண்டால் ரூ.1,360 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**கோமாரி நோய் தாக்குதல்: அதிகாரிகள் ஆய்வு**

கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தாக்குதல் காரணமாக வீடு, வீடாகச் சென்று கால்நடை மருத்துவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோய்த் தாக்குதல் காரணமாக 100-க்கும் மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சென்னிமலை, பெருந்துறை, சித்தோடு, நசியனூர் உள்ளிட்ட பகுதிகளில் மாடுகள் இறந்துள்ளன. இப் பகுதிகளில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் அதிகாரிகள் குழுவினர் நேரடியாக வீடு, வீடாகச் சென்று மாடுகளுக்கு தடுப்பூசி போட்டு வருகிறார்கள்.

ஆட்டையாம்பாளையம், வேட்டை பெரியாம்பாளையம், சாமிக்கவுண்டன்பாளையம், ஆலுச்சாம்பாளையம், தயிர்பாளையம் பகுதிகளில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளுக்குத் தடுப்பூசி போடுவதற்காக தயிர்பாளையத்தில் முகாம் அமைக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவர் மாரியப்பன் தலைமையில் டாக்டர்கள் செந்தில் செல்வன், தாமோதரன், பிரகாசம் ஆகியோர் கொண்ட குழுவினர் இக் கிராமத்தில் முகாமிட்டுள்ளனர். நோய் தாக்கப்பட்ட மாடுகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

மேலும், கிராமப்புறங்களில் தடுப்பூசிகள் போடப்படாத மாடுகளுக்கு நேரடியாகச் சென்று தடுப்பூசி போட்டு வருகின்றனர். சித்தோடு கால்நடை மருத்துவமனைக்கு உள்பட்ட சித்தோடு, பேரோடு, கங்காபுரம் பகுதிகளில் கால்நடை மருத்துவர் கோவிந்தசாமி தலைமையில் 5 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குழுவுக்கும் 2 பேர் வீதம் கிராமப்புற பகுதிகளுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். தொடர்ந்து இப் பகுதிகளில் அதிகாரிகள் குழுவினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து கால்நடை மருத்துவர்கள் கூறுகையில், கோமாரி நோய் என்பது வைரஸ் தாக்குதலால் ஏற்படுகிறது. 2007-க்குப் பிறகு மீண்டும் தற்போது இந் நோய் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு பால் உற்பத்தி குறையும்; சினைப் பிடித்தலும் தடைபடும். கோமாரியால் பாதிக்கப்பட்ட மாட்டில் இருந்து காற்றின் மூலமாகவும் இந்த நோய் பரவும். மாடுகளுக்கு காய்ச்சல், கால் நொண்டுதல், வாயிலிருந்து நுரை கலந்த உமிழ் நீர் ஒழுகியவாறு இருத்தல் போன்றவை நோயின் அறிகுறியாகும். இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு பசுந்தீவனம், காய்ச்சிய கஞ்சியை உணவாக அளிக்க வேண்டும்.

நோய் அறிகுறி தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குத் தகவல் அளிக்க வேண்டும். மாடுகளுக்கு அவ்வப்போது போடக்கூடிய தடுப்பூசிகளை உரிய காலத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். இந்த தடுப்பூசியை போட்டால் சினைப் பிடிக்காது, பால் சுரக்காது என நினைத்து விவசாயிகள் மாடுகளுக்கு தடுப்பூசிகளை போட்டுக் கொள்வதில்லை. இதனாலேயே இந்த நோய் விரைவாகப் பரவுகிறது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் இதற்கு தேவையான மருந்துகள் தயார் நிலையில் உள்ளன என்றனர்.

**செடியில் கடலையைப் பிரிக்கும் இயந்திரம்**

செடியில் இருந்து கடலையை எளிதாகப் பிரிக்கும் இயந்திரத்தை ஈரோட்டைச் சேர்ந்த விவசாயி உருவாக்கியுள்ளார்.

தொழில் வளமும், வேளாண் வளமும் மிகுந்த கொங்கு மண்டலத்தில் விவசாயப் பணிகளுக்கு கூலியாள்கள் கிடைப்பது கடந்த 15 ஆண்டுகளாக சிரமமாக இருந்து வருகிறது. திருப்பூர் பனியன் நிறுவனங்களில் காவலாளி பணி கிடைத்தால்கூடப் போதும், விவசாயக் கூலி வேலை வேண்டாம் என்ற எண்ணம் சில ஆண்டுகளாகவே தொழிலாளர்களுக்கு வந்துவிட்டது.

இது ஒருபுறம் இருக்க, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் அமல்படுத்தப்பட்ட பின், வேளாண் பணிகளுக்கு ஆள்கள் கிடைப்பது குதிரைக்கொம்பாகிவிட்டது.

இதனால், வேளாண் பணிகளில் இயந்திரங்களைப் புகுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். ஒருசில ஆர்வமிக்க விவசாயிகள், தாங்களே புதிய கருவிகளை உருவாக்கியும் வருகின்றனர். அந்த வகையில், ஈரோடு நசியனூரைச் சேர்ந்த இயற்கை விவசாயி கே.மோகனசுந்தரம் (59), கடலைச் செடிகளில் இருந்து கடலையைப் பிரிக்கும் இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்.

எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துள்ள இவர், தனது தோட்டத்தில் இயற்கை விவசாயம் செய்து வருகிறார். இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வாருடன்

நெருக்கமான தொடர்பில் இருப்பவர். இவர், உருவாக்கியுள்ள கடலை பிரிக்கும் இயந்திரம் மூலமாக கடலை அறுவடையின்போது பயன்படுத்தப்படும் வேலையாள் எண்ணிக்கையை பாதியாகக் குறைக்க முடியும். இந்த இயந்திரத்தை எளிதில் கையாளவும் முடியும்.

இதுகுறித்து, விவசாயி மோகனசுந்தரம் கூறியதாவது:

பொதுவாக, ஓர் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட கடலைச் செடிகளைப் பிடுங்கி, அதிலிருந்து கடலைகளை தனியாகப் பிரித்தெடுக்க 40 ஆள்கள் தேவை. இதற்கு ரூ. 6,000 கூலியாகச் செலவு செய்ய வேண்டும். ஆனால், கடலைச் செடிகளை ஆள் வைத்துப் பிடுங்கிய பின்னர், இயந்திரத்தைப் பயன்படுத்தி கடலைகளைப் பிரித்தால் 18 பேர் மட்டும் போதும். கூலி ரூ. 2,700 தான் ஆகும்.

செடியில் இருந்து கடலைகளைப் பிரிக்கும்போது கடலைகள் உடையாது.

செடியில் இருக்கும் குப்பையை தனியாகப் பிரிக்க இயந்திரத்தின் கீழ் பகுதியில் வசதி உள்ளது. இக் கருவியில் கால் குதிரைத்திறன் (ஹெச்.பி.) கொண்ட மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. இக் கருவியை உருவாக்க ரூ.22,000 செலவானது. இது மின்சாரத்தில் இயங்கக்கூடியது. 8 மணி நேரம் இயக்கினால் 1.5 முதல் 2 யூனிட் வரை மின்சாரம் செலவாகும்.

இக் கருவியை எந்த இடத்துக்கும் எளிதில் எடுத்துச் செல்ல முடியும் என்றார்.

**நவ. 20, 21 இல் கால்நடை வளர்ப்புப் பயிற்சி முகாம்**

கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த இலவசப் பயிற்சி முகாம் நவம்பர் 20 மற்றும் 21 ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தின் சார்பில், திண்டுக்கல் ஆட்சியர் அலுவலக வளாகத்தில், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில், கறவை மாடுகள் வளர்ப்பில் தீவன மேலாண்மை குறித்தும், கறி ஆடு வளர்ப்பில் நவீன யுத்திகள் பற்றியும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நவம்பர் 20 மற்றும் 21 ஆம் தேதிகளில் நடைபெறும் இப் பயிற்சி முகாமில், விவசாயிகள் மட்டுமின்றி, கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ள அனைவரும் பங்கேற்கலாம்.

இலவசப் பயிற்சி அளிக்கப்படும் இந்த முகாம் குறித்து, கூடுதல் விவரங்கள் பெற 0451-2460141 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என, ஆராய்ச்சி மையத்தின் உதவிப் பேராசிரியர் பி. சங்கர் தெரிவித்துள்ளார்.

மழைக் காலங்களில் கோழிகளைத் தாக்கும் வெள்ளைக் கழிச்சல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு, மருத்துவப் பல்கலைக்கழகம் சார்பில் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவமனைகளுக்குச் சென்று கோழிகளுக்குத் தடுப்பூசி போட முடியாதவர்கள், இந்தத் தடுப்பு மருந்தினை வாங்கிப் பயன்பெறலாம்.

தீவனத்தில் கலந்தோ, தனியாகவோ இந்தத் தடுப்பு மருந்துகளை கோழிகளுக்கு கொடுக்கலாம். சுமார் 2000 கோழிகளுக்கான தடுப்பு மருந்து கையிருப்பு உள்ளதால், தேவைப்படுவோர், இலவசமாக வழங்கப்படும் மருந்துகளை வாங்கி பயன் பெறலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நெல் பயிருக்கு களைக்கொல்லி பயன்படுத்தும் விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி வேண்டுகோள்

ராமநாதபுரம் மாவட்டத்தில் பருவமழை 4 நாள்களாக தொடர்ந்து பெய்து வருவதால் விவசாயிகள் களைக்கொல்லி

மருந்துகளை வேளாண்மைத்துறை அதிகாரிகளின் ஆலோசனைப்படி தெளித்திடுமாறு வேளாண்மை இணை இயக்குநர் நா.வீ.கிருஷ்ணமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பெய்துவருவதால் விவசாய பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

இதுவரை 1.8லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் விதைப்பு பணிகள் நடந்துள்ளது. இதில் 52 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் 10-15 நாள் பயிராக உள்ளது. கடந்த 4 நாள்களாக தொடர்ந்து பருவமழை பெய்து வருவதால், விவசாயிகள் களைகளை கட்டுப்படுத்திட களைக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி வருகின்றனர்.

இம்மருந்துகளை வேளாண்மை அலுவலர்களின் ஆலோசனையின்படி தெளித்திடுமாறும் கைக்களையாக இருந்தால் பயிர் முளைத்த 15 ஆவது நாள் ஒரு முறையும், 30 ஆம் நாள் ஒரு முறையும் ஆள்வைத்து களையெடுக்க வேண்டும்.

களைக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு பிரட்டிலாகுளோர் 1.25லிட்டர்,புட்டோ குளோர் 2.5 லிட்டர், தயோபென்கார்ப் 2.5லிட்டர், பென்டி மெத்தாலின் 1 லிட்டர் இதில் ஏதாவதொன்றை தெளிக்க வேண்டும். நெல் வயலில் களை முளைத்த பின்பு களைகளை கட்டுப்படுத்திட பிஸ்பைரிக் சோடியம் என்ற களைக்கொல்லி மருந்தினை எக்டேருக்கு 200 மி.லி. என்ற அளவில் பயன்படுத்திட வேண்டும். தற்சமயம் விவசாயிகள்

அதிகளவில் புதிய மூலக்கூறு கொண்ட களைக்கொல்லியினை பயன்படுத்தி வருவது தவறாகும்.

களைக் கொல்லியின் முழு பயனையும் அடைந்திட விவசாயிகள் மருந்தினை கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். மருந்தினை தெளிக்கும் போது பிரத்யேக நாசில் (விசிறி தெளிப்பான்) கொண்டு தான் தெளிக்க வேண்டும். இதனால் வயலில் மருந்து சீராக பரவி களையை கட்டுப்படுத்தும். முக்கியமாக களைக்கொல்லி மருந்து தெளிக்கும் போது வயலில் தண்ணீர் தேங்கி இருக்கக் கூடாது. வயலானது மெழுகு பதத்தில் இருக்க வேண்டியது அவசியம்.

மருந்து அடித்து குறைந்தது 6 மணி நேரத்திற்கு மழை இருக்கக் கூடாது. அதற்கேற்றவாறு தெளிக்க வேண்டும். களைக் கொல்லி தெளித்த வயல்களாக இருந்தால் அதில் நடக்கூடாது.

தற்சமயம் விவசாயிகளுக்கு களைக்கொல்லி மருந்துகள் மானிய விலையில் வேளாண்மைத்துறை அலுவலகங்கள் மூலமாக வழங்கப்படுகிறது. இதனை விவசாயிகள் பெற்று பயனடையுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மாடியில் தோட்டம் அமைக்க 13-இல் பயிற்சி முகாம்**

வீட்டின் மாடியில் தோட்டம் அமைக்க விரும்புவோருக்கு சென்னையில் நவ.13-ஆம் தேதி பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

சென்னை அண்ணாநகரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தகவல் மற்றும் பயிற்சி மையத்தில் காலை 9.30 மணிக்கு தொடங்கும் முகாமில் காய்கறிகள், பழவகைகள், மூலிகை உள்ளிட்டவற்றை வீட்டின் மாடியில் தோட்டம் அமைத்து பராமரிக்கும் முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

முகாமில் கலந்து கொள்வோருக்கு பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். மேலும் இதுகுறித்த தகவல்கள் பெற 044-26263484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**



காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு நொடிக்கு 8,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணை கடந்த ஆகஸ்ட் 2-ஆம் தேதி திறக்கப்பட்டது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு டெல்டா மாவட்டங்களில் மழை பெய்ததால் அந்தப் பகுதிகளில் தண்ணீரின் தேவை குறைந்தது. இதையடுத்து, மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பும் குறைக்கப்பட்டது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலும் பாசனத்துக்காக நொடிக்கு 2,700 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

தற்போது, காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை பெய்யாததால் நீரின் தேவை அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, மேட்டூரில் இருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவு நொடிக்கு 8,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டு வாரங்களாக வெளியேற்றப்படும் நீரின் அளவு, வரத்தைக் காட்டிலும் குறைவாகவே இருந்ததால், அணையின் நீர்மட்டம் அதிகரித்து 80 அடியைத் தாண்டியது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80.81 அடியாகவும், நீர்வரத்து வினாடிக்கு 6,236 கன அடியாகவும், இருப்பு 42.76 டி.எம்.சி.யாகவும் இருந்தது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.11.2013**

## மஞ்சளில் இலைப்புள்ளி நோய்: விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம்

தம்மம்பட்டி: தம்மம்பட்டி பகுதியில், சாகுபடி செய்துள்ள மஞ்சள் பயிரில், இலைப்புள்ளி நோய் தாக்கம் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தம்மம்பட்டி சுற்றுவட்டார பகுதியில், மஞ்சள் பயிர் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நன்கு வளர்ந்த மஞ்சள் செடியில், இலை முழுவதும் புள்ளி நோய் ஏற்பட்டு, இலைகள் புழுப்பு நிறமாகவும், நோய் தீவிரத்தால், செடிகள் வளர்ச்சி இல்லாமலும், உற்பத்தி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலைப் புள்ளி, இலை கருகல் நோயால், மஞ்சள் கிழங்கு அழுகல் ஏற்பட்டுள்ளதோடு, மஞ்சள் விளைச்சல் குறையும் சூழல் உருவாகியுள்ளது. அதனால், விவசாய நிலங்களில் மஞ்சள் சாகுபடி செய்து, கிழங்கு வளர்ச்சி இல்லாததால், வளர்ந்த மஞ்சள் செடிகளை உழவு செய்து அழித்து, மாற்று பயிர் செய்யும் பணியில், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.மஞ்சளில், இலைப்புள்ளி நோய் தாக்கம் காரணமாக விளைச்சல் அதிகளவில் பாதித்துள்ளதால், தம்மம்பட்டி பகுதி விவசாயிகள், பெரும் கவலையடைந்துள்ளனர்.மூலப்புதூர் விவசாயிகள் ராமர், முருகன் கூறியதாவது:கடந்த, ஜூலை மாதத்தில், ஒரு ஏக்கர் மஞ்சள் சாகுபடி செய்து, களை எடுத்தல், உரமிடுதல் ஆகிய பராமரிப்பு பணிகள் மேற்கொண்டோம். தற்போது, இலைப்புள்ளி நோய் தாக்கம் ஏற்பட்டு கிழங்கு வளர்ச்சி இல்லை.சாகுபடி செய்த மஞ்சளில் இலைப்புள்ளி நோய் தாக்கத்தால், ஐந்து மாதங்களாக செய்த பராமரிப்பு பணம் வீணானது. அதனால், பயிர் செய்த மஞ்சளை உழவு செய்து அழித்து, மாற்று பயிர் செய்ய உள்ளோம்.இவ்வாறு கூறினர்.

## கொளத்தூரில் குளிர்பதன கிடங்கு: சுற்றுப்பகுதி விவசாயிகள் கோரிக்கை

மேட்டூர்: "கொளத்தூரில் விளைபொருட்களை பாதுகாக்க, அரசு குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும்' என, சுற்றுப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.கொளத்தூர் ஒன்றியம், பண்ணவாடி, பூதப்பாடி, குட்டிகவுண்டனூர், கோவிந்தபாடி, கருங்கல்லூர், தண்டா, ஏழுபரணைக்காடு, செட்டியூர், மூலக்காடு பகுதியில் மிளகாய், தக்காளி, மஞ்சள், வாழை உள்ளிட்ட பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.கொளத்தூர் சுற்றுப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை பாதுகாக்க, கொளத்தூரில், அரசு குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சவேரியார் பாளையம் விவசாயி மாதப்பன் கூறியதாவது:கொளத்தூரில் வாழை, மிளகாய், மஞ்சள் உள்பட பணபயிர் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கொளத்தூர் மிளகாய் தமிழக முழுவதும் பிரசித்தி பெற்றது. ஆனால், உற்பத்தி அதிகரிக்கும் காலத்தில், விளைபொருட்களை இருப்பு வைத்து, ஆதாய விலை கிடைக்கும் சமயத்தில் விற்க கொளத்தூர் குளிர்பதன கிடங்கு இல்லை.ஆனால், மேச்சேரியில் இரு ஆண்டுக்கு முன் விளைபொருட்களை பாதுகாக்க குளிர் பதன கிடங்கு கட்டிய நிலையில், தற்போது அதன் அருகாமையில் மற்றொரு குளிர்பதன கிடங்கு கட்டியுள்ளது கொளத்தூர் பகுதி விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.விளை பொருட்களை பாதுகாக்க கொளத்தூரிலும் குளிர் பதன கிடங்கு கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## மாதுளை சாகுபடியில் மேட்டூர் விவசாயிகள்... கூடி யோசித்தால்ஈட்டலாம் கோடி வருவாய்

மேட்டூர்: கூடுதல் வருவாய் ஈட்டி சாதிக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு விவசாயிகள் பலர் ஒன்றிணைந்து, தங்கள் நிலத்தில், ஹைபிரிட் மாதுளை சாகுபடி செய்துள்ளனர். இரு ஆண்டு முயற்சிக்கு பின், செடிகளில் மாதுளை காய்க்க துவங்கியுள்ளது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், வறட்சியான பகுதியாகும். இப்பகுதி விவசாயிகள் கிணறு, போர்வெல் பாசனத்தை நம்பியே பயிர் சாகுபடி செய்கின்றனர். கடின உழைப்பு இருந்தும், விவசாயத்தின் மூலம் எதிர்பார்த்த

வருவாய் கிடைக்காதது, கொளத்தூர் பகுதி விவசாயிகள் பலரையும் சிந்திக்க வைத்தது.
விவசாயத்தின் மூலம் கூடுதல் வருவாய் ஈட்டி சாதித்து காட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு, கொளத்தூர் அடுத்த கும்பாரபட்டி, தொட்டிகிணறு உள்பட சுற்றுப்பகுதி விவசாயிகள், பத்து பேர் ஒன்றிணைந்து ஆலோசித்து தங்கள் நிலங்களில் அதிக வருவாய் ஈட்டி தரும் ஹைபிரிட் மாதுளை சாகுபடி செய்தனர்.இரு ஆண்டு அயராத உழைப்புக்கு பின், செடிகளில் மாதுளை காய்க்க துவங்கியது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கும்பாரப்பட்டி விவசாயி செந்தில்குமார் கூறியதாவது:எங்கள் பகுதியில் விவசாயம் முழுமையாக நிலத்தடி நீரை நம்பியே உள்ளது. சில ஆண்டு கோடையில் கிணறு, போர்வெல்களில் தண்ணீர் வற்றி விடும் என்பதால், பயிர் கருகி நஷ்டம் ஏற்படும். இதனால், எங்கள் பகுதி விவசாயிகள், பத்து பேர் ஒன்று சேர்ந்து நீண்டகால பலன் தரும் ஹைபிரிட் மாதுளை சாகுபடி செய்ய முடிவு செய்தோம்.
இதற்காக மஹாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களுக்கு நாங்களே சுற்று பயணம் செய்து, விவசாயிகளை நேரில் சந்தித்து ஆலோசனை கேட்டோம். ஹைபிரிட் மாதுளையில் பாகுவா,கணேஷ், மிருதுளா உள்பட ஐந்துக்கும் மேற்பட்ட ரகம் உள்ளது. இதில், பாகுவா மாதுளையில் விதைகள், ரத்த சிவப்பாகவும், கவர்ச்சியாகவும், இருக்கும்.

சந்தைப்படுத்துவது எளிது என்பதால் பாகுவா மாதுளையை தேர்வு செய்து, நடவு செய்தோம். அனைத்து விவசாயிகளும் சேர்ந்து எங்கள் பகுதியில், 30 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தில் இரு ஆண்டுக்கு முன்சாகுபடி செய்தோம். பாகுவா மாதுளை இரு ஆண்டுகளுக்கு பின் காய்க்க துவங்கும். தொடர்ந்து, பத்து ஆண்டு வரை காய்க்கும்.
தற்போது நாங்கள் சாகுபடி செய்த மாதுளை காய்க்க துவங்கி விட்டது. தண்ணீர் பற்றாக்குறை சமாளிக்க சொட்டு நீர் பாசனம் செய்கிறோம். பெங்களூர், கோவை சந்தையில் ஒரு கிலோ மாதுளையை, 50 ரூபாய்க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். மாதுளை பழம் எவ்வளவு காய்த்தாலும் கொள்முதல் செய்ய வியாபாரிகள் தயாராக உள்ளனர்.
கர்நாடகா மாநிலம், சித்திரதுர்கா பகுதியில், 1,000 ஏக்கருக்கு மேல் விவசாயிகள் மாதுளை சாகுபடி செய்துள்ளனர். அங்கு சில இடங்களில், ஒரு மாதுளை, 800 கிராம் எடை வரை காய்க்கிறது. அவர்கள் ஆலோசனைபடி மாதுளையை

பராமரிப்பதால், இனி வரும் எட்டு ஆண்டு மாதுளை மூலம் தொடர்ச்சியாக வருமானம் கிடைக்கும். விவசாயத்தில் சிந்தித்து செயல்பட்டால் நிச்சயம் லாபம் சம்பாதிக்க முடியும்.மாதுளையில் கீழ்நோக்கி வரும் கிளைகளை வெட்டி மராமத்து செய்ய வேண்டும். இதற்காக பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கர்நாடகாவில் உள்ளனர். மராமத்து செய்வதற்கு அவர்களையே அழைப்போம். தொழிலாளர்கள் அவர்களுக்கு சொந்தமான கார்களில் வந்து, சில நாள் தங்கி, மராமத்து பணி செய்வர். இவர்கள் தமிழ்நாடு மட்டுமின்றி, கர்நாடகா, மஹாராஷ்டிரா என பல மாநிலங்களுக்கும் சென்று மராமத்து பணி மேற்கொள்கின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

## கத்தரி செடிகளில் கொக்குக்கால் நோயால் கவலை : பாலாற்று கரையோர விவசாயிகள் கண்ணீர்

காஞ்சிபுரம் : கத்தரி செடிகளில், கொக்குக்கால், வேர்ப்பூச்சி நோய்களின் தாக்கம் கடுமையாக இருப்பதால், பாலாற்றங்கரையோர விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், பாலாற்றங்

கரையை ஒட்டியுள்ள விப்பேடு, நரப்பாக்கம், விஷார், பெரும்பாக்கம்

கிராமங்களில் விவசாயிகள், வெண்டை, தக்காளி, முள்ளு மற்றும் நாட்டுக் கத்தரி ஆகியவற்றை சாகுபடி செய்து வருகின்றனர்.

நோய்த்தாக்கு...

தற்போது, இங்குள்ள கத்தரி தோட்டங்களில், வழக்கமான நோய் கட்டுப்பாட்டு முறைகளுக்கும் அடங்காத, தாக்குதல்

ஏற்பட்டு உள்ளது.

இதுகுறித்து, விஷார் கிராம விவசாயி சேகர் கூறுகையில், "ஒரு ஏக்கர் நிலத்தில், நாட்டுக் கத்தரி செடிகளை நடவு செய்தேன். நாற்பதாவது நாளில் மழை பெய்தது. நிலத்தில், மழைநீர் தேங்காமல் வடிய வைத்தேன். ஆனால், பூ எடுத்து, காய்க்கத் தயாராக இருந்த நேரத்தில், 60 சதவீதம் செடிகளை, வேர்ப்பூச்சி மற்றும் கொக்குக்கால் நோய் தாக்கியதால், பாதிப்பு ஏற்பட்டது. தேவையான மருந்து தெளித்தும், செடிகளை காப்பாற்ற முடியவில்லை. செடிகள் வளர்ச்சியில்லாமல்

கருகி உள்ளன. இதனால், கடும் இழப்பு ஏற்பட்டுள்ளது," என்றார்.

முசாரவாக்கம் விவசாயி சுஜாதா கூறுகையில், "கடன் வாங்கி கத்தரி, வெண்டை செடிகளை நடவு செய்தேன். தீபாவளிக்காக, வெளி சந்தைக்கு காய்கறிகளை அனுப்ப முடிவு செய்திருந்தேன். நன்கு செழிப்பாக இருந்த செடிகள் திடீரென, வளர்ச்சி இல்லாமல் அழுகிவிட்டன. இதனால், வியாபாரிகளுக்கு சொன்னபடி கத்தரி, வெண்டைக்காய்களை அனுப்ப முடியவில்லை. இந்த பருவம் எங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதால், தீபாவளி 'கசப்பானதாக' அமைந்துவிட்டது," என்றார்.

இனிப்பு தன்மை உள்ளதால்

காஞ்சிபுரம் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ஸ்ரீவாஸ்தவா கூறியதாவது: தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, தேவையான கத்தரி, வெண்டை உள்ளிட்ட காய்கறிகளின் விதைகளை, 50 சதவீதம் மானிய விலையில் வழங்குகிறோம். இவ்வாண்டிற்கான விதைகள், இன்னும் வழங்கவில்லை.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1,020 ஏக்கர் பரப்பளவில், கத்தரி செடிகள் பயிரிடப்பட்டுள்ளன. இந்த செடிகளில் இனிப்பு தன்மை உள்ளதால், இவற்றை பூச்சி, நோய்கள் ஒரே இரவில் தாக்கிவிடுகின்றன. விப்பேடு, நரப்பாக்கம், விஷார், முசரவாக்கம் ஆகிய கிராமங்களில், நோய்களால் தாக்கப்பட்டுள்ள கத்தரி செடிகளை பார்வையிட்டு, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குவோம்.

## மிளகாயில் இலைப்பேன் தாக்குதல்கட்டுப்படுத்த அதிகாரி யோசனை

குளித்தலை: மிளகாய் பயிரில் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தக்கூடிய வழிமுறைகளை, தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:தோகைமலை வட்டாரத்தில், 170 ஏக்கரில் விவசாயிகள் மிளகாய் பயிர் சாகுபடி செய்துள்ளனர். தற்போது மிளகாய் பயிரில் பரவலாக, இலைப்பேன் தாக்குதல் காணப்படுகிறது. இதை உரிய பயிர் பாதுகாப்பு

நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்திட வேண்டும்.சிர்ட்டோதிரிப்ஸ் டார்சாலிஸ் என்ற இலைப்பேன்களின் இளம் குஞ்சுகள் மற்றும் வளர்ந்த பூச்சிகள், மஞ்சள் நிறத்தில் இலைகளின் அடிப்பாகங்களில் கூட்டம், கூட்டமாக காணப்படும். இலைகளுக்கு அடியில் இருந்து கொண்டு மிளகாய் செடியில் உள்ள சாற்றை உறிஞ்சி வாழ்வதால், தாக்கப்பட்ட மிளகாய் இலைகள் சுருண்டும், சிறுத்தும் காணப்படும். பிறகு பழுப்பாக மாறி உதிர்ந்து விடுகின்றன.மேலும் பேன்கள் இலைக்காம்புகளையும், பூ மொட்டுகளையும் தாக்குவதால், மொட்டுகள் உதிர்ந்து விடுகின்றன. இதனால், 30 சதவீதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இந்த இலைப்பேன் மிகச் சிறியதாகவும், மஞ்சள் நிறத்துடன் சீப்பு போன்ற பிரிந்த இறக்கைகளுடனும் காணப்படும். இந்த பூச்சி, மிளகாய் தவிர பருத்தி, தேயிலை, திராட்சை, ஆமணக்கு ஆகிய பயிர்களையும் தாக்கி சேதம் ஏற்படுத்துகிறது.மிளகாய் பயிரில் தோன்றும் இலைப்பேன்களை கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீரில் வேப்பங்கொட்டை சாறு, ஐந்து சதவீதம் அல்லது வேப்ப எண்ணெய், மூன்று சதவீதம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும், ஒரு லிட்டர் தண்ணீரில் டிரை அசோபாஸ், 2 மில்லி அல்லது புரோபனோபாஸ், 2 மில்லி அல்லது பெப்ரோனில், 1.5 மல்லி அல்லது இமிடாகுளோபிரிட், 0.5 மில்லி, இவற்றில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

### தேங்காய் பருப்பு விலை உயர்வுகரூர் விவசாயிகள் மகிழ்ச்சி

வேலாயுதம்பாளையம்: தேங்காய் பருப்பு விலை உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்சியடைந்துள்ளனர்.கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் புகளூர், நொய்யல், சேமங்கி, நடையனூர், மரவாபாளையம், தவிட்டுப்பாளையம், திருக்காடுதுறை உள்ளிட்ட, 15க்கும் மேற்பட்ட காவிரி கரையோர பகுதிகளில், 7,000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில், தென்னை மரம் சாகுபடி செய்து வருகின்றனர்.தென்னை மரங்கள் பாசனத்திற்காக தனித்தனி வாய்க்கால்கள் வெட்டப்பட்டு, தண்ணீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் விளைவதால், இளநீர் இனிப்பாகவும் ருசியாகவும் இருக்கும். இதனால் கரூர் மாவட்டத்திலிருந்து, உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களுக்கு அதிகளவில் தேங்காய்

விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.வேலாயுதம்பாளையம் சுற்றுப்பகுதியில் உள்ள தென்னை மரங்களில் விலையும் தேங்காய் என்றாலே நல்ல மவுசு இருந்ததால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்தது. சீஸன் இல்லாத நேரங்களில் தேங்காயை உடைத்து பருப்பை, எண்ணை நிறுவனங்களுக்கு விவசாயிகள் விற்று வந்தனர்.

கடந்த மாதம், 15 கிலோ எடை டின், 900 ரூபாய்க்கு விற்றது. தற்போது, ஒரு கிலோ தேங்காய் பருப்பின் விலை, 65 ரூபாயாக அதிகரித்து, ஒரு டின், 975 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தேங்காய் பருப்பு விலை தொடர்ந்து விலை உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

## பசுந்தேயிலைக்கு நிர்ணய விலை வழங்காததால் சர்ச்சை! நீலகிரி சிறு விவசாயிகள் பெரும் ஏமாற்றம்

ஊட்டி : ஐகோர்ட வழிகாட்டுதல் படி, நீலகிரி மாவட்டத்தில், பசுந்தேயிலைக்கான மாத விலையை 14 ரூபாயாக, "மாவட்ட விலை நிர்ணய கமிட்டி' நிர்ணயம் செய்துள்ளது; "பல தொழிற்சாலைகள், இந்த விலையை வழங்கவில்லை' என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

நீலகிரி மாவட்ட தேயிலை தொழில், பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. "தாங்கள் வழங்கும் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை' என்ற குற்றச்சாட்டை சிறு தேயிலை விவசாயிகள், சில ஆண்டுகளாக கூறி வருகின்றனர். இதுதொடர்பாக, சிலர், ஐகோர்ட்டில் வழக்கு தொடுத்து, "பசுந்தேயிலைக்கு நியாயமான சந்தை விலையை வழங்க வேண்டும்' என்ற உத்தரவை பெற்றனர்.

கமிட்டி அமைப்பு

இதையடுத்து, "இந்த விவகாரத்தில், தேயிலை வாரியம், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, மத்திய அரசு அறிவுறுத்தியது. விளைவாக, "நீலகிரி மாவட்ட கலெக்டர், தேயிலை வாரிய செயல் இயக்குனர், உபாசி கே.வி.கே., அலுவலர்கள், சிறு விவசாயிகள்' என, தேயிலை தொழில் சார்ந்தோரை உள்ளடக்கி "மாவட்ட விலை கண்காணிப்பு குழு' அமைக்கப்பட்டது. இக்குழு, மாதந்தோறும்,

பசுந்தேயிலைக்கு தொழிற்சாலைகள் வழங்க வேண்டிய விலையை நிர்ணயம் செய்யும்; அந்த விலையை தேயிலை தொழிற்சாலைகள், விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

விலை நிர்ணயம்

அந்த அடிப்படையில், "கடந்த மாதம் (அக்.,), ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு வழங்க வேண்டிய மாத விலை 14 ரூபாய்' என, கண்காணிப்பு குழு, விலை நிர்ணயம் செய்தது. ஆனால், பெரும்பாலான தொழிற்சாலைகள், இந்த விலையை விவசாயிகளுக்கு வழங்கவில்லை. மாறாக, கிலோவுக்கு 12.50 ரூபாய் வரை மட்டுமே வழங்கியுள்ளன. இதனால், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். "தேயிலை வாரிய உத்தரவை சரியான முறையில், அமல்படுத்த வேண்டும்' என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அதே போன்று, விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு வழங்கப்படும் வார விலையும், ஏற்ற தாழ்வுடன் காணப்படுகிறது. பல தொழிற்சாலைகள், விவசாயிகளுக்கு முன்பணம் வழங்கி, பிறகு விலையை வழங்குகின்றன. பசுந்தேயிலை விலையில் நிலவும் விலை ஏற்றத் தாழ்வுகள், விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது.

## மாடுகளை காப்பாற்ற தொடர் சிகிச்சை : விவசாயிகளுக்கு அதிகாரி கோரிக்கை

ஈரோடு: ""மாடுகளுக்கு சினை பிடிக்க தாமதமும், பால் உற்பத்தி குறையும் என நினைத்து, நோய் பாதித்த மாடுகளுக்கு, தொடர் சிகிச்சையளிக்க மறுப்பதால், நோய் பாதிப்பு அதிகரித்து வருகிறது. ஆரம்ப நிலையில் கண்டுபிடித்து, தொடர் சிகிச்சையளித்தால் முற்றிலுமாக குணப்படுத்தலாம்,'' என கால்நடை துறை இணை இயக்குனர் வணங்காமுடி தெரிவித்தார்.

தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களை தொடர்ந்து, திருவண்ணாமலை, வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்களில், மாடுகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு அதிகரித்து வருகிறது. டெல்டா மாவட்டத்தில் நோய் தடுப்பு மருந்துகள் தருவிக்கப்பட்டு, மாடுகளுக்கு தொடர்

சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு, பெருந்துறை தாலுகாகளில் மாடுகளுக்கு கோமாரி நோய் பதிப்பு அதிகரித்துள்ளது.
கோமாரி நோய்க்கு,பழங்கால முறைப்படியே மருத்துவம் பார்ப்பதால், நோயை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். இதுகுறித்து மாவட்ட கால்நடைத்துறை துணை இயக்குனர் வணங்காமுடி கூறியதாவது: டெல்டா மாவட்டத்தை தொடர்ந்து, ஈரோட்டில் மாடுகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஐந்து கட்டமாக மாடுகளுக்கு நோய் தடுப்பூசி ஊசிகள் போட்டுள்ளனர். டாக்டர்கள் கணக்கெடுப்பு படி, 40 மாடுகளுக்கு கோமாரி நோய் பாதிக்கப்பட்டுள்ளது, தெரியவந்தது. இந்நோயால், 10 மாடுகள் இறந்துள்ளன.மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. நோய் பாதிப்பு உள்ள பகுதியில் ஒட்டுமொத்த மாடுகளுக்கு தடுப்பூசி போட முன்வராமல், நோய் பாதித்த மாடுகளுக்கு மட்டும் ஊசி போடுகின்றனர்.மாடுகள் இறந்தால், மருத்துவர்களுக்கு தகவல் தெரிவிக்காமல், புதைப்பதும், நீர் நிலைகளில் போடுவதாலும், மற்ற கால்நடைகளுக்கு நோய் பரவும். கோமாரி நோய்களால் மாடுகள் இறப்பது இல்லை. தொண்டை கட்டு நோயால் மாடுகள் பாதிக்கிறது.நோய் பாதித்த மாடுகளுக்கு தொடர்ந்து தடுப்பு மருந்துகள் போடாமல், ஓரிரு முறை மருந்துகள் கொடுத்து நிறுத்திக்கொள்வதால், பாக்டீரியா பாதிப்பு ஏற்பட்டு மாடுகள் இறந்து விடுகின்றன.
டெல்டா மாவட்டங்களில் தொடர்ந்து, 15 ஊசிகள் வரை போடப்பட்டு மாடுகளுக்கு சிகிச்சையளித்து வருகின்றனர். இங்குள்ள விவசாயிகள், சினை பிடிக்க கால தாமதமாகும் எனவும், பால் உற்பத்தி குறையும் எனவும் தவறாக எண்ணி வருகின்றனர். நாட்டு மாடுகளுக்கு நோய் பாதிப்பு குறைவு, கலப்பின ஜெர்சி மாடுகளுக்கு நோய் பாதிப்பு அதிகம் உள்ளது. பால் உற்பத்திக்காக உருவாக்கப்படும் கலப்பினத்தில், விகிதாச்சாரம் உயர்கிறது.இங்குள்ள காலநிலைக்கு மாடுகள் தாக்கப்பிடிக்க முடிவதில்லை. நோய் பாதிப்பு தெரிந்ததும், உடனடியாக மருத்துவரை அணுகி, தொடர் சிகிச்சை அளிப்பதால், மாடுகளை நோயில் இருந்து காப்பாற்றலாம்.நோய் தடுப்பு வழிகள் குறித்த அத்தனை முயற்சியும், மாவட்ட நிர்வாக அறிவுரைப்படி, கால்நடைத்துறை மேற்கொண்டு வருகிறது, என்றார்.

## விவசாயிகள் உயிர் உரங்களை இட்டு நல்ல மகசூல் பெற்றிடலாம் வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

ஆறுமுகநேரி: திருச்செந்தூர் வட்டாரத்தில் பிசான நெல் சாகுபடி உயர் விளைச்சலுக்கு உயிர் உரங்களை இட்டு நல்ல மகசூல் பெற்றிட திருச்செந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து திருச்செந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் பிரம்மநாயகம் தெரிவித்துள்ளதாவது. திருச்செந்தூர் வட்டாரத்தில் பிசான நெல் சாகுபடிக்கான பணிகள் துவங்கி உள்ளன. உயர் விளைச்சலுக்கு உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா மற்றும் நெல் நுண்ணூட்டம் உரம் இட்டு நல்ல மகசூல் பெற்றிடலாம். விவசாயிகள் நெல் சாகுபடியில் அதிகமான ரசாயண உரங்கள் இடுவதால் மண்ணின் தன்மை களர், உவராக மாறுகிறது. விவசாய ரசானய உரங்கள் இயற்கை உரங்கள், மக்கிய தொழுஉரம் அல்லது பசுந்தாள் உரம் மற்றும் உயிர் உரங்கள் இட வேண்டும். இதனால் மண்ணின் தன்மை மாறுபடும். அசோஸ்பைரில்லம்: உயிர் உரமானவை நெல் பயிருக்கு இடுவதால் வேரில் அதிகமான தளைச்சத்து நிலை நிறுத்திட பயிர் விளைச்சலுக்கும் மற்றும் அசோஸ்பைரில்லம் இனப் பெருக்கம் அதிகமாக கிடைக்கிறது. ரசாயன உரம் - யூரியா இட்டால் நீரில் கரைந்து ஆவியாகி விரையம் ஆகுகிறது. இதனால் உயிர் உரம் அதிகம் இட வேண்டும். பாஸ்போபாக்டீரியா: நெல் வயலில் மண்ணில் உள்ள கிட்ட நிலையில் உள்ள மணிச்சத்தை எளிதில் பயிருக்கு கிடைக்கும் நிலையை மாற்றம் செய்திட பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் செயல்படுகிறது. நெல்நுண்ணூட்ட உரம்: நெல் பயிர் பேரூட்டம் யூரியா ÷ப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் (தழைச்சத்து மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து) இடுகிறார்கள். களர், உவர் தன்மை உடைய நிலையில் சிங்சல்பேட் குறைவால் நெல் பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். இந்நிலையில் உள்ள நலத்திற்கு நெல் நுண்ணூட்டம் 12.500 கிலோ ஒரு ஏக்கருக்கு இட வேண்டும். விவசாயிகள் தங்களுக்கு தேவையான உயிர் உரங்களை திருச்செந்தூர், சோனகன்விளை மற்றும் ஆறுமுகநேரி வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குநர் பிரம்மநாயகம் தெரிவித்துள்ளார்.

## வடகிழக்கு பருவமழை தீவிரமடைவது... ஏக்கத்துடன் காத்திருக்கும் விவசாயி

காரியாபட்டி : விருதுநகர் மாவட்டத்தில் கடந்தாண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்ததால், நகைகளை அடமானம் வைத்தும், கடன் வாங்கியும் விவசாயம் செய்த விவசாயிகள், வறுமை நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்நிலையில், இந்தாண்டு வடகிழக்கு பருவமழை துவங்கினாலும், இதுவரை தீவிரமடையவில்லை. அதற்காக காத்திருக்கும் அவர்கள், கடந்தாண்டைப்போல வறட்சி ஏற்படுமோ என்ற கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டத்தில், விவசாயம் பிரதான தொழிலாக இருந்தது. ஆனால், கடந்த 20 ஆண்டுகளாக சரிவர மழை பெய்யாததால், ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்தில் பெரியநஷ்டம் ஏற்படுகிறது. நல்ல மழை பெய்யும் என நம்பி, விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது. ஆயினும், நிலங்களை தரிசாக போட மனமில்லாமல், கடனை வாங்கி அவர்கள் விவசாயம் செய்துள்ளனர்.

விவசாயகளுக்கு பெரிதும் உதவும் வடகிழக்கு பருவமழை,கடந்தாண்டு பொய்த்துப்போனது. இந்தாண்டும் இதுவரை தீவிரமடையாமல் கண்ணாமூச்சி காட்டுவதால், விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். கடனுக்கு மேல் கடன் பின் தொடர்வதால், கிராமப்புற விவசாயிகள் கடனை அடைக்க வேறு பிழைப்பு தேடி வெளியூர்களுக்கு செல்ல நேரிடுகிறது. விவசாய குடும்பத்தினரை காப்பாற்ற கடந்தாண்டு அரசு வறட்சி நிவாரணம் வழங்கியது.

இந்தாண்டும் அதுபோன்ற சூழ்நிலை ஏற்படுமோ என்ற கவலையில் விவசாயிகள் ஆழ்ந்துள்ளனர். வடகிழக்கு பருவமழை விரைவில் தீவிரமடையவேண்டுமென அவர்கள் எதிர்பார்த்து காத்துக்கொண்டு
உள்ளனர்.

புளியம்பட்டி ராஜகோபால்: ஒவ்வொரு ஆண்டும் நன்கு மழைபெய்யும் என்ற நம்பிக்கையில் எள், சோளம், பருத்தி, துவரை உள்ளிட்ட விவசாயத்தை தொடர்ந்து செய்துவருகிறேன். துவக்கத்தில் பெய்யும் மழை, பின் பருவ மாற்றங்களால் பொய்த்து போகிறது. விவசாயத்தால் ஏற்பட்ட நஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. அதற்காக, வாங்கிய கடனை அடைக்க முடியாமல் திணறி வருகிறேன். அரசு,

கடந்தாண்டு வறட்சி நிவாரணம் வழங்கி எங்களை காப்பாற்றியது போல், இந்தாண்டும் வழங்கவேண்டும்.

விஜயமுருகன், மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர்: விருதுநகர் மாவட்டத்தில், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, சேத்தூர், சாத்தூர், காரியாபட்டி, திருச்சுழி பகுதிகளில் நெல் விவசாயம் அதிகம் செய்யப்படும். தற்போது, வட கிழக்கு பருவமழை தீவிரமடையாததால் விதைத்த "நாற்றுக்கள்' முற்றி விட்டன. இதனால், இனி மழை பெய்தாலும் நடவுப்பணி செய்ய முடியாத சூழலில் விவசாயிகள் உள்ளனர். பலஇடங்களில் கண்மாய் நிரம்பாததால், 10 நாட்கள் கூட இருப்பு வைக்க முடியாத அளவிற்கு தண்ணீர் உள்ளது. இதை நம்பி எப்படி விவசாயம் செய்ய முடியும்.

கடந்தாண்டு வடகிழக்கு

பருவ மழை பொய்த்ததால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டாவது நல்ல மழை பெய்ய வேண்டும் என விவசாயிகள், மேகத்தை அண்ணாந்து பார்த்து காத்து கிடக்கின்றனர்.

அழகு சுந்தரம், நல்லதரை : எங்களுக்கு விவசாயத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாததால் இதனையே தொடர்ந்து செய்கிறோம். ஏக்கருக்கு 10 ஆயிரம் செலவழித்தும் மழை இல்லாததால் பயிர் முளைத்த நிலையிலேயே கருகி விட்டது. இப்@பாது மீண்டும் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் மறு உழவு செய்து விதைத்துள்ளோம். கடந்த முறைதான் வடகிழக்கு பருவ மழை ஏமாற்றி ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் நஷ்டமடைந்தோம்.

### காய்ந்து வரும் தென்னை மரங்கள் பாதிப்பில் விவசாயிகள்

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவி., சுற்று பகுதிகளில், கடும் வறட்சி நிலவி வருவதால், தண்ணீரின்றி தென்னை மரங்கள் காய்கின்றன.இதனால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

ஸ்ரீவி., வத்திராயிருப்பு, மம்சாபுரம், செண்பக தோப்பு பகுதிகளில், பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புகளில், விவசாயிகள் தென்னை சாகுபடி செய்துள்ளனர்.

ஸ்ரீவி.,யில் பகுதியில், கடந்த இரு ஆண்டுகளாக, சரி வர மழை பெய்யாததால்,

கண்மாய்கள் வறண்டு காணப்படுகிறது. இதனால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து, கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலை உள்ளது.
தற்போது அடிக்கும் வெயிலின் கொடுமையால், ஸ்ரீவில்லிபுத்தூர், கிருஷ்ணன்கோவில், மல்லி, நாச்சியார் பட்டி, அச்சன் தவிர்த்தான், கூனம்பட்டி, செங்குளம் உட்பட பல பகுதிகளில், வெயிலுக்கு தாக்குபிடிக்காமல், ஏராளமான தென்னை மரங்கள் காய்ந்து, பட்டு போய் வருகின்றன. ஓரிரு இடங்களில், கிணறுகளில் கிடைக்கும் சிறதளவு தண்ணீரை வைத்து, விவசாயிகள் தென்னை மரங்களை பராமரித்து வருகின்றனர். தென்னை மரங்களில் காய்பலன்களும் கடுமையாக குறைந்துள்ளன. அந்த காய்களும், மிக சிறிதாகவே உள்ளது. விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.
விவசாயி ராமராஜ்,""கடந்த இரு ஆண்டுகளாக, மழை இல்லாததால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, கிணறுகளில் தண்ணீர் இல்லை. மேலும், தற்போது அடிக்கும் வெயிலை தாக்குபிடிக்க முடியாமல், தென்னை மரங்கள் காய்ந்து வருகிறது. வறட்சிக்கு தாக்குபிடித்த மரங்களில், காய் பலன்களும் குறைந்த நிலையில் உள்ளது. மிகுந்த இழப்பு ஏற்பட்டுள்ளது," என்றார்.

## விவசாயிகளுக்கு "சோலார் பம்ப் செட்'

அருப்புக்கோட்டை : விவசாய பணிகளுக்காக, விருதுநகர் மாவட்ட விவசாயிகளுக்கு, சோலார் பம்ப் செட்கள் அளிக்கப்பட உள்ளது.
விவசாய நிலங்களில், மின் தடையால் ஒருசில நேரங்களில், நீர் இறைப்பது தடைப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு, சூரிய சக்தி மூலம், வயல்களுக்கு நீர் பாய்ச்ச, பம்ப்செட்களை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுகிறது. அதன்படி, விருதுநகர் மாவட்டத்திற்கு, முதற்காட்டமாக, 40 சோலார் பம்ப் செட்களை, விவசாயிகளுக்கு அளிக்கப்பட உள்ளது.
ஒரு பம்ப் செட் 5 லட்சம் ரூபாய் மதிப்பு உடையது. இதில், 4 லட்சம் அரசு மானியமாகவும், ஒரு லட்சம் பயனாளிகளும் அளிக்க வேண்டும். மேலும், இந்த திட்டத்ததுடன், செட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம், மழை தூவான் கருவி

ஆகியவை, இலவசமாக அளிக்கப்படும். தேவைப்படும் விவசாயிகள், அருகில் உள்ள வேளாண்., அலுவலகத்தை தொடர்பு கொண்டு, தகவல் பெறலாம்.

### மழையை நம்பி முழுவீச்சில் நெல் விவசாயம்:இறவை மூலம் தண்ணீர் பாய்ச்சும் அவசியம்

திருப்புவனம் : திருப்புவனம் அருகே சொக்கனாதிருப்பில், பெய்த மழையை நம்பி விதை, விதைத்து முழுவீச்சில் நடவு செய்த விவசாயிகள், விளைச்சல் கண்டு வீடு வந்து சேருமா என்ற பதை, பதைப்போடு உள்ளனர். இதனால், இறவை மூலம் தண்ணீர் பாய்ச்சி, கொஞ்ச நஞ்ச பயிரையாவது காப்பாற்றும் நோக்கில், விவசாயிகள் மணிக்கணக்கில் தண்ணீர் இறைக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது.
திருப்புவனம் அருகே சொக்கனாதிருப்பு பகுதி வானம் பார்த்த கண்மாய் விவசாயம். விவசாயத்தை மட்டுமே பிரதானமாக கொண்ட விவசாயிகள், பல ஆண்டுகளுக்குப்பின் நடப்பாண்டு பெய்த மழையை நம்பி நெல் நடவு பணியில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர். இதில், 350 ஏக்கரில் 250 ஏக்கர் நடவு செய்துள்ளனர். மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் செலவில் நடவு செய்துள்ளனர்.
சில வாரமாக மழையின்றி விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர். விளைந்த நெற்பயிரை காப்பாற்ற இறவை மூலம் தண்ணீர் பாய்ச்சும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். கூலி ஆட்களை வைத்து தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இரண்டு ஆட்கள் மூலம் ஒரு ஏக்கருக்கு 20 மணிநேரம் தண்ணீர் இறைக்கும் நிலை உள்ளது.
கண்மாய் ஓரப்பகுதியில் தேங்கி கிடக்கும் சிறிதளவு தண்ணீரை வைத்து விளைந்த நெற்பயிரை காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக்கையில் உள்ளனர். இருந்தாலும் மழை பொய்த்துவிட்டால், விவசாயிகள் நிலை அதோகதிதான். ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் செலவு செய்தது, வீடு வந்து சேருமா என்ற மன கலக்கத்தில் உள்ளனர். வரும் காலத்தில் மழை பெய்தால்தான் நடவு செய்த பயிர்கள் மூலம் நஷ்டமின்றி விளைச்சல் காணமுடியும் என்று நம்புகின்றனர். இதனால், விளைந்த நெற்பயிர்களை காப்பாற்ற இறவை மூலம் தண்ணீர் இறைப்பதும், தண்ணீரின்றி

நெற்பயிர்கள் கருகுவதும்; என்ன நடந்தாலும் பரவாயில்லை, வளர்ந்த நாற்றுகளை நடவு செய்வதை தவிர வேறு வழியில்லை என நடும் சூழலும் இங்கு நிலவுகிறது. விவசாயி சேகர் கூறியதாவது; இது வானம் பார்த்த கண்மாய். சிறு மழை பெய்தாலே விதைப்பு, நடவு பணியில் ஈடுபடும் ஆர்வமுள்ள விவசாயிகள் அதிகம். 350 ஏக்கருக்கு 250 ஏக்கரில் நடவு செய்துள்ளோம். மழை பொய்த்தால், எங்கள் வாழ்வும் பொய்த்துவிடும். வைகை ஆற்றிலிருந்து ஆறு கிலோமீட்டர் தூரமிருக்கிறோம். வைகை நீர் கிடைக்க செய்யவேண்டும், என்றார்.

## மொச்சை பயிர் சாகுபடி செய்த விவசாயிகள் பாதிப்பு : நோய் தாக்குதலால் விளைச்சல் இல்லை

போடி : தேனி மாவட்டம், போடி பகுதியில் மொச்சை பயிரில் ஏற்பட்டுள்ள நோய் தாக்குதலை கட்டுப்படுத்தாததினால் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் போடி அருகே சில்லமரத்துப்பட்டி, சிலமலை, ராசிங்காபுரம், பொட்டிபுரம், சூலப்புரம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளை பொறுத்தவரை 5 ஆயிரம் ஏக்கருக்குமேல், மானாவாரி பயிர்களை நம்பியே விவசாயிகள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

ஜூலை கடைசியில் பயிரிடப்படும் மொச்சை பயிரானது நவம்பர் மாத இறுதியில் காய் எடுப்பு எடுக்க விவசாயிகள் துவங்கி விடுவர். மொச்சையை பொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் விளைச்சல் மட்டுமின்றி, விலையும் இருந்து வந்ததால் பக்கத்து மாவட்டங்களுக்கு இங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

ஆனால், இந்த ஆண்டை பொறுத்தவரை மழை பொய்த்தது ஒருபுறமிருக்க மொச்சையில் பூ பூத்த நிலையில் செடிகள் நோய்களினால் பாதிப்பு ஏற்பட்டு இலைகள் மஞ்சள் நிறமாக மாறியுள்ளது. சில இடங்களில் மொச்சை பயிர் விளைச்சல் துவங்கிய நிலையில் மொச்சை முழு வளர்ச்சியின்றியும், உள்ளே பருப்புகள் இல்லாமல் மஞ்சள் நிறமாக மாறி செடி வளர்ச்சி அடையாத நிலையில் காய்ந்து வருகின்றன. ஆண்டுதோறும் மொச்சை எப்போதும் விளைச்சல் அதிகரித்திருக்கும் நிலையில் இந்த ஆண்டு விளைச்சல் இல்லாமல் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

விளைச்சல் இல்லாததினால் கடந்த ஆண்டை காட்டிலும், இருமடங்கு விலை அதிகரித்து காணப்படும். மொச்சையை நம்பி விவசாயம் செய்த விவசாயிகளுக்கு இந்த ஆண்டு பெரும் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது. மொச்சை பயிரில் நோய் தாக்கம் குறித்து விவசாயிகள் பல முறை புகார் செய்தும்,நோய் தாக்குதலை கட்டுப்படுத்த, தடுப்பதற்கான ஆலோசனை கூட வழங்க முன்வராத நிலையில் விவசாய துறை அதிகாரிகள் மெத்தனம் காட்டியுள்ளனர்.இதனால், நோய் தாக்குதலினால் பாதிப்பு ஏற்பட்ட மொச்சை செடிகளை, கால்நடை தீவனத்திற்கு பயன்படுத்த வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில்:

எஸ். பழனிச்சாமி, விவசாயி, மணியம்பட்டி: மொச்சையை பொறுத்த வரை டிசம்பர் துவக்கத்தில் வெளிமார்க்கெட்டில் விற்பனை துவங்கி விடும். நவம்பர் கடைசியாகியும் செடிகளில் காய்கள் கூட காய்க்காமலும், இலைகள் மஞ்சள் நிறமாவும், காய்கள் வளர்ச்சி அடையாமல் செடிகளிலே காய்ந்து விடுகின்றன.இதனால் செடிகளில் காய்கள் பறிக்க முடியாமல் மாட்டு தீவனத்திற்கு பயன்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆர். கண்ணன், விவசாயி,சிலமலை: இது போன்று நோய்தாக்குதல் ஏற்பட்டது கிடையாது. மொச்சையில் நோய் தாக்குதல் ஏற்பட்டு இலைகள் பழுப்பு நிற கலராகவும், மொச்சை பயிர் வளர்ச்சி இல்லாமல் வெம்பிய நிலையில் உதிர்ந்து விடுகின்றன. விவசாயதுறை அதிகாரிகளுக்கு பல முறை புகார் செய்தும், ஆலோசனை வழங்கவும் முன் வர தயக்கம் காட்டி வருகின்றனர். மொச்சையில் ஏற்பட்டுள்ள நோய் தாக்குதலை தடுக்க விவசாய துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## துவரை சாகுபடி முடக்கம்

தேனி : பருவமழை தாமதத்தால் விவசாயத்துறையின் துவரை சாகுபடி திட்டம், முடங்கி உள்ளது.

விவசாயத்துறை சார்பில், துவரை நாற்று வளர்த்து சாகுபடி செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பாலித்தீன் பைகளில் துவரை நாற்றுகளை வளர்த்து குறிப்பிட்ட நாட்களுக்கு பின் எடுத்து நடவு செய்து

வளர்க்கப்படுகிறது.இப்படி துவரை சாகுபடி செய்வதன் மூலம் இரு மடங்கு விளைச்சல் கிடைக்கும், என விவசாயத்துறை பிரசாரம் செய்து வருகிறது. தேனி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை மிகவும் குறைவாக பெய்தது. வடகிழக்கு பருவமழையும் தாமதம் ஆகி வருகிறது. எனவே, தேனி மாவட்டத்தில் விவசாயம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளது. இதனால் விவசாயத்துறையின் துவரை சாகுபடி திட்டம், முடங்கி உள்ளது.

### காய்கறி விலை உயர்வு

ஒட்டன்சத்திரம் : முகூர்த்த சீசன் காரணமாக, ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி, வெண்டை விலை கிலோவிற்கு ரூ.6 அதிகரித்துள்ளது.

வரும் வியாழன், வெள்ளி முகூர்த்த நாளாக இருப்பதால் சுபகாரியங்கள் அதிகமாக நடக்க உள்ளன. விருந்திற்கு தேவைப்படும் காய்களை வியாபாரிகள் வாங்க ஆர்வம் காட்டியதால், கடந்த வாரத்தை காட்டிலும் இந்தவாரம் காய்களின் விலை உயர்ந்துள்ளது.

ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து குறைவாக இருந்தது. இதனால் கடந்த வாரம் ஒரு கிலோ தக்காளி ரூ.12க்கு விற்றது. இதன் விலை நேற்று கிலோவிற்கு ரூ.6 வரை அதிகரித்து ரூ.18க்கு விற்பனையானது.

இதேபோல் கடந்த வாரம் கிலோ ரூ.6 வரை விற்ற வெண்டைக்காய் ரூ.12க்கும், கிலோ ரூ.1.50 க்கு விற்ற சுரைக்காய் ரூ.4க்கு விற்றது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 11.11.2013

### மேட்டூரில் இருந்து நீர்திறப்பு அதிகரிப்பு



மேட்டூர் : தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் போதிய அளவுக்கு பருவமழை பெய்யாததால், பாசனத்துக்கான நீர் தேவை அதிகரித்துள்ளது. இதையடுத்து, விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நேற்று காலை விநாடிக்கு 2 ஆயிரம் கனஅடியில் இருந்து விநாடிக்கு 8500 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அணைக்கு விநாடிக்கு 6236 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் 80.81 அடியாக உள்ளது. நீர் இருப்பு 42.76 டிஎம்சி. பாசன தேவை அதிகரித்தால் தண்ணீர் திறப்பு மேலும் அதிகரிக்கப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விலை குறைக்கப்படாததால் தர்மபுரி பட்டுக்கூடு அங்காடிக்கு வரத்து அதிகரிப்பு**



தர்மபுரி : தமிழகத்தில் தர்மபுரி, சேலம், பாலக்கோடு, பென்னாகரம், கோயமுத்தூர் ஆகிய இடங்களில் பிரதான பட்டுக்கூடு விற்பனை அங்காடிகள் உள்ளன. இந்த அங்காடிகளுக்கு பட்டுக்கூடு வளர்ப்பவர்கள் உற்பத்தி செய்த பட்டுக்கூடுகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். விலைகள் குறைக்கப்படாததால் வெளி மாநில வியாபாரிகள் விற்பனையில் பங்கேற்க ஆர்வம் காட்டுகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் 1,650 ஏக்கர் பரப்பளவில் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் 1,300 விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பட்டுக்கூடுகளை வாங்க 50க்கும் மேற்பட்ட பட்டு நூற்பாளர்கள் மாவட்டத்திலேயே உள்ளனர். இதேபோல் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பட்டுக்கூடுகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். தர்மபுரி பட்டுக்கூடு விற்பனை அங்காடிக்கு தினமும் 50க்கும் மேற்பட்ட லாட்டுகள் (ஒரு லாட் 40 கிலோ எடையுள்ளது) வருகிறது.

இந்நிலையில் மாவட்ட பட்டுக்கூடு விற்பனை அங்காடியில், கடந்த சில நாட்களாக 100 லாட் வரை (4 ஆயிரம் கிலோ) பட்டுக்கூடுகள் விற்பனைக்கு வந்த வண்ணம் உள்ளது. இது குறித்து பட்டு வளர்ச்சி துறையின் டான்சில்க் சேர்மன் மணிவண்ணன் கூறுகையில்:

பட்டு நூற்பாளர்கள் மட்டுமின்றி பட்டுக்கூடு உற்பத்தியாளர்களிடமும் விலை

குறையாது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியதால், இதர பட்டுக்கூடு விற்பனை அங்காடிகளை விட, தர்மபுரி பட்டுக்கூடு அங்காடிக்கு அதிக அளவில் பட்டுக்கூடு வரத்து உள்ளது என்றார்.

**பாஸ்மதி அரிசி விலை உயர்வு**



புதுடெல்லி: அரிசி மொத்த விலை சந்தையில் பாஸ்மதி அரிசியின் விலை ஒரு குவிண்டாலுக்கு நேற்று ரூ.200 உயர்ந்தது. பாஸ்மதி அரிசி நடுத்தர ரகம் தற்போது ஒரு டன் ரூ.99,200 ஆக உள்ளது. இந்நிலையில், பாஸ்மதி ரக அரிசி சந்தைக்கு வருவது குறைந்துள்ளது. தொடர் மழையே இதற்கு காரணம் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். டெல்லியில் மொத்த விலை சந்தையில் நேற்று பாஸ்மதி அரிசி வரத்து குறைவாக இருந்தபோதும், இருப்பு வைப்பதற்காக வர்த்தகர்கள் இடையே அதை வாங்குவதில் கடும் போட்டி காணப்பட்டது. இதன் காரணமாக, 100 கிலோ மூட்டைக்கு ரூ.200 வரை விலை உயர்ந்தது. இதேபோல், பார்லியை வாங்குவதிலும் தொழில் நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன. இதனால் அதன் விலையும் நேற்று கணிசமாக உயர்ந்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.11.2013**

**திருவாரூர் மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பு பணிகளை கலெக்டர் ஆய்வு**



திருவாரூர் மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பு பணிகளை கலெக்டர் நடராசன் ஆய்வு செய்தார்.

**<u>கோமாரி நோய்</u>**

திருவாரூர்-நாகப்பட்டினம் மாவட்ட எல்லைப் பகுதிகளில் உள்ள 225 பஞ்சாயத்துகளில் 82 ஆயிரத்து 20 பசு மாடுகளும், 817 எருமை மாடுகளும் உள்ளன. இந்த கால்நடை களுக்கு கோமாரி நோய் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

கால்நடைகளுக்கு நோய் தடுப்பு மருந்து அளித்தல், சத்து ஊசி போடுதல், வலி நிவாரணம் அளித்தல் போன்ற மருத்துவ பணிகள் சிறப்பு குழுக்கள் மூலமாக நடை பெற்று வருகின்றன. திரு வாரூர்-நாகப்பட்டினம் மாவட்ட எல்லையான காடு வெட்டி, தேதியூர், கண்டிர மாணிக்கம் ஆகிய ஊர்களில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பு பணியை திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் பார்வையிட்டு ஆய்வு செய் தார்.

அப்போது அவர் கூறிய தாவது:-

## 18 குழுக்கள்

திருவாரூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்பரவாமல் தடுப்பதற் கான முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன. கால்நடைகளுக்கு நோய் ஏற்படுவதை தடுப்பதற்கான மருத்துவ பணிகளை மேற்கொள்ள கால்நடை மருத்துவர், கால்நடை ஆய்வாளர் மற்றும் உதவி யாளர்கள் என மொத்தம் 54 பேர் கொண்ட 18 குழுக்கள் அமைக்கப்பட் டுள்ளன.

## மருந்து பொருட்கள்

ஒரு குழுவிற்கு 3 கிராமங்கள் வீதம் பிரிக்கப்பட்டு நோய் பாதித்த கால்நடைகளுக்கு நோய் கிருமி கொல்லி மருந்துகள் அளிக்கப்படு கின்றன. சத்து ஊசி, வலி நிவாரண ஊசி, காய்ச்சல் ஊசிகள் போடப்படுகிறது. காற்றில் பரவக்கூடிய கோமாரி நோயை முற்றிலுமாக தடுப்பதற்கு கிராமப்பகுதி களில் சாதாரண மாக எளிதில் கிடைக்கும் ஆடுதொடா, ஊமத்தை, வாத நாராயணன், வேப்பிலை, வில் வம், துளசி, நொச்சி, நார்த்தை இலை, தும்பை ஆகிய இலை களை மருந்து பொருட்களுக்கு பயன்படுத்தலாம்.

## முற்றிலுமாக தடுக்க முடியும்

நோய் பரவும் காலங்களில் புதிதாக மாடுகளை வாங்கவோ, விற்கவோ கூடாது. நோய் பாதிப்பு ஏற்பட்டு இறந்த கால்நடைகளை ஆற்றிலோ, குளத்திலோ வீசாமல், ஆழமாக குழி தோண்டி புதைப்பது நல்லது. தோண்டிய குழியில் சுண்ணாம்பு தூள் அல்லது பிளீச்சிங் பவுடர் அல்லது உப்பு தெளித்த பிறகு மண்ணை தள்ளி மூட வேண்டும்.

குடிநீர் ஆதாரங்கள் அருகே நோய்வாய்ப்பட்டு இறந்த மாடுகளை புதைக்க கூடாது. இதுபோன்ற வழி முறைகளை கடைப்பிடித்தால் நோய் பரவுவதை முற்றிலுமாக தடுக்க முடியும்.

இவ்வாறு கலெக்டர் கூறி னார்.

ஆய்வின் போது கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் முகமது கனி, உதவி இயக்குனர் தனபால் ஆகியோர் உடன் இருந்தனர்.